செ.வெ.எண்: 32 நாள்:18.05.2021

# பத்தரிக்கை செய்தி

## கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுவரை 8,033,69 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.2000/-வீதம் கொரோனா சிறப்பு நிவாரண நிதி முதல் தவணை ரூ.160.6கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள, சுமார் 2,07,66,950 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2,000 வீதம் ரூ.4,153.39 கோடி செலவில் நிவாரண தொகை முதல் தவணையாக மே மாதத்திலேயே வழங்கும் ஆணையில் தமிழ்நாடு முதலமைச்சராக 07.05.2021 அன்று பதவியேற்றவுடன் கையொப்பமிட்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள 2.07கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/- வழங்கும் திட்டத்தினை (10-05-2021) அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள தொடங்கி வைத்தார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10,18,637 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா சிறப்பு நிவாரண நிதி முதல் தவணை ரூ.2000/-யை வழங்கும் பணியினை (15.05.2021) அன்று மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

| கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 15.05.2021 முதல் 18.05.2021 வரை கொரோனா நிவாரண நிதி வழங்கப்பட்ட விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | தாலுக்கா | அரிசி குடும்ப அட்டைதாரர்கள் | கொரோனா நிவாரண நிதி ரூ.2000/- வழங்கப்பட்ட அரிசி குடும்ப அட்டைத்தாரர்கள் | கொரோனா நிவாரண வழங்கப்பட்ட சதவீதம் |
| 1. | ஆனைமலை | 60147 | 51078 | 85 |
| 2. | அன்னூர் | 54719 | 44480 | 81 |
| 3. | கோயம்புத்தூர் வடக்கு | 139055 | 100569 | 72 |
| 4. | கோயம்புத்தூர் தெற்கு | 121579 | 94099 | 77 |
| 5. | கோயம்புத்தூர் மேற்கு | 119195 | 91077 | 76 |
| 6. | கிணத்துக்கடவு | 32487 | 28264 | 87 |
| 7. | மதுக்கரை | 87147 | 68007 | 78 |
| 8. | மேட்டுப்பாளையம் | 81410 | 68426 | 84 |
| 9. | பேரூர் | 111895 | 85275 | 76 |
| 10. | பொள்ளாச்சி | 90353 | 76271 | 84 |
| 11. | சூலூர் | 102496 | 85398 | 83 |
| 12. | வால்பாறை | 17137 | 10425 | 61 |
| | மொத்தம் | 1017620 | 803369 | 79 |

என தற்போது வரை (18.05.2021) மொத்தம் 8,03,369 (79 சதவீதம்) அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா சிறப்பு நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு கொரோனா சிறப்பு நிவாரண நிதி வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**